2018 மார்ச் 21]

அந்தக் கல்லூரிகளும் தொடங்கப்பட்டு, இன்றைக்கு அனைத்து இடங்களிலும் அவை நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. திருச்சுழி பகுதியிலே அந்தக் காலக்கட்டத்தில் இடமானது போதிய அளவிற்குக் கிடைக்கவில்லை என்ற காரணத்தால், அது ஒன்று மட்டும் விடுபட்டிருக்கிறது. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுக்கொண்டதன் அடிப்படையிலே, அந்த மாவட்டத்தினுடைய மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள் கேட்டுக்கொண்டதன் அடிப்படையிலே, எதிர்காலங்களில் தேவைக்கேற்ப அது ஆய்வு செய்யப்படும் என்பதையும் இந்த நேரத்திலே சுட்டிக்காட்டுகிறேன்.

அடுத்து, பல்கலைக்கழகத்தினுடைய உறுப்புக் கல்லூரிகளில் பணியாற்றுகின்ற ஆசிரியர் பெருமக்களுக்கு சம்பளம் குறைவு என்று சொல்கின்றார்கள். நம்முடைய அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளிலே இன்றைக்கு Guest Lecturers *ஆக பணியாற்றக்கூடியவர்களுக்கு ஆறாயிரம் ரூபாய் சம்பளம் என்றிருந்ததை, ரூபாய் பத்தாயிரமாக உயர்த்தியவர் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். அதேபோல, பத்தாயிரம் ரூபாயிலிருந்து பதினைந்தாயிரம் ரூபாயாக உயர்த்தித் தந்தவரும் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான். இந்தச் சூழ்நிலையிலே, பல்கலைக்கழகத்தினுடைய உறுப்புக் கல்லூரிகளில் வரும் காலங்களில் உரிய ஆய்வுகள் மேற்கொண்டு, அவர்களுடைய உழைப்புக்கேற்றாற்போல் சம்பளம் வழங்குவதற்கு அரசானது பரிசீலனை செய்யும் என்பதைச் சுட்டிக்காட்டி அமர்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 66, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர், மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.*

66—

நியாய விலைக் கடையைப் பிரித்தல்

***12379—திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்:**

மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடையநல்லூர் தொகுதி, முத்துகிருஷ்ணாபுரம் வார்டு 6 மற்றும் 7-ல் இயங்கி வரும் அமுதம் நியாய விலைக் கடை எண் 4-ஐ இரண்டாகப் பிரிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.*

(அ) மற்றும் (ஆ) கடையநல்லூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட முத்துகிருஷ்ணாபுரம், வார்டு 6 மற்றும் 7-ல் இயங்கிவரும் அமுதம் நியாய விலைக் கடை எண் 4-ஐ இரண்டாகப் பிரிக்கக் கோரியது தொடர்பாக விசாரணை மேற்கொள்ளப்பட்டு, அது பரிசீலனையில் உள்ளது என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர், இருக்கையில் இல்லை.*

வினா வரிசை எண் 67, மாண்புமிகு உறுப்பினர் திருமதி மு. பரமேஸ்வரி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

67—

ஆரம்ப சுகாதார நிலையம்

***9238—திருமதி மு. பரமேஸ்வரி:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மண்ணச்சநல்லூர் தொகுதி, மண்ணச்சநல்லூர் ஊராட்சி ஒன்றியம், சனமங்கலம் ஊராட்சியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*